# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110249

1. District மாவட்டம் : Coimbatore  PS: காவல்நிலையம் : VAC AC  Year: ஆண்டு : 2020  FIR No.: மு.த.அ. எண் : 11/2020/AC/CB  Date: நாள் : 09.12.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption  Sections பிரிவுகள்: 7(a), 7(A)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended by  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: the Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் : 09.12.2020  Date to : நாள் வரை :
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல் : 14.00 hrs  Time to : நேரம் வரை : 23.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 09.12.2020  Time நேரம் : 10.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 09.12.2020  Time நேரம் : 10.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written (typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி : O/o. Karumathampatty Town Panchayat (Special Grade), Somanur at about 35 Km, South East
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :  District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : Tr. P. Duraisamy
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Pachaippan
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 48/2020  (d) Nationality நாட்டினம் : Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : Inspection Cell Officer/Deputy Collector  (g) Address : முகவரி : District Collector Office, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. P. Selvaraj, Executive Officer, Karumathampatty Town Panchayat, Somanur, Coimbatore.
   2) Tr. R. Shanmugamuthu, S/o Rangappa Gounder, Door No. 13 [illegible] Karumathampatty Road, Somanur, Coimbatore. 3) Tr. A. Ponraj, S/o Arumugam, Door No. 10/A, Periyakadu, Goundampalayam, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — no delay —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04/12/2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் [illegible]
Rank: நிலை [illegible]....No. எண் [illegible]

Vigilance and Anti Corruption [illegible]

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:

**Contents of FIR in Cr.No.11/2020/AC/CB u/s 7(a), 7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018.**

இன்று 09.12.2020-ம் தேதி காலை 10.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் T.H.கணேஷ் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.ப.துரைசாமி ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர் கோயமுத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 11/2020/AC/CB u/s 7(a),7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 –ஆக வழக்கு பதிவு செய்தேன். புகாரின் விவரம் பின்வருமாறு அனுப்புநர் ப.துரைசாமி, ஆய்வுக்குழு அலுவலர்/துணை ஆட்சியர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கோயமுத்தூர்-641018. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோயமுத்தூர்-641030. ந.க.எண்.-686/2020/ஜ1 நாள் 09.12.2020 அய்யா, பொருள்- திடீர் தணிக்கை - கோயம்புத்தூர் மாவட்டம் - கருமத்தம்பட்டி (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகம் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை குறிப்புடன் புகார் மேல்நடவடிக்கைக்காக அனுப்புதல் - சம்பந்தமாக கோயம்புத்தூர் மாவட்டம், சோமனூரில் அமைந்துள்ள கருமத்தம்பட்டி (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலராகப் பணிபுரியும் திரு.பி.செல்வராஜ் என்பவர் அப்பேரூராட்சி அலுவலகத்திற்கு, கட்டிட வரைபட அனுமதி, மனைபிரிவு அங்கீகாரம் செய்தல், 20-சென்டுக்குட்பட்ட மனை வரன்முறை படுத்துதல், சொத்து வரிவிதிப்பு, சொத்துவரி பெயர் மாற்றம், புதியகுடிநீர் இணைப்பு வழங்குதல், அரசு நிதியில் சாலை அமைத்தல், பிறப்பு இறப்பு சான்றிதழ் வழங்குதல் மற்றும் தனியார் நிலத்தை பல்வேறு நோக்கங்களுக்காக பேரூராட்சிக்கு நன்கொடையாக ஒப்படைக்க ஆவணங்களை பதிவு செய்ய பரிந்துரை செய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தொடர்பான கோப்புகள் மீது நடவடிக்கை எடுத்து மனுதாரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுத்திட இடைத் தரகர்கள் மூலமும், நேரடியாகவும் லஞ்சம் பெற்றுவருவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சோமனூரில் அமைந்துள்ள கருமத்தம்பட்டி (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகத்தை 08.12.2020-ம் தேதி சுமார் 14.00 மணியளவில் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு பிரிவு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் குழுவினருடன் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கையில் கீழ்கண்ட விபரங்கள் தெரிய வந்தது. மேற்படி அலுவலகத்தில் திடீர்

தணிக்கையின் போது கருமத்தம்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் என்பவர் பணியில் இருந்தார். மேலும் அவரது அறையில் அமர்ந்திருந்த இரண்டு நபர்களை விசாரித்தபோது அதில் ஒருவர் தனது பெயர் அந்தோணி ராஜா என்றும் தான் கருமத்தம்பட்டி புனித மைக்கேல் துறவற சகோதரர்கள் சபையில் பொருளாளராக இருப்பதாக தெரிவித்தார். மற்றொருவரை விசாரிக்க அவர் தனது பெயர் பொன்ராஜ் என்றும் தான் கோவை மாநகரம் கவுண்டம்பாளையம், டி.வி.எஸ் நகரில் வசித்து வருவதாகவும் தான் ஆர்.எஸ்.புரத்தில் உள்ள Somu's Properties என்ற கட்டுமான நிறுவனத்தில் கட்டிட பொறியாளராக பணிபுரிந்து வருதாகவும் தெரிவித்தார். மேற்படி இருவரும் கருமத்தம்பட்டி புனித மைக்கேல் துறவற சகோதரர்கள் சபைக்கு சொந்தமான சூலூர் வட்டம், கருமத்தம்பட்டி கிராமம், க.ச.எண்.277/1A மற்றும் 277/1B1 காலைகளில் சுமார் 35-அடி அகலமும், 94.80 மீட்டர் நீளமும் கொண்ட இடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பொதுபாதைக்காக கருமத்தம்பட்டி பேரூராட்சிக்கு தானமாக கொடுப்பது சம்பந்தமாக பேரூராட்சி அலுவலகத்தில் 05.09.2020 மற்றும் 24.11.2020 ஆகிய தேதிகளில் கொடுத்திருந்த விண்ணப்பம் தொடர்பாக செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் அவர்களிடம் மேற்படி நன்கொடை ஆவணம் பதிவு செய்ய பரிந்துரைக் கடிதம் வழங்குமாறு கேட்டுக்கொண்டிருந்ததாக தெரிவித்தனர். அப்போது செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் என்பவரை சோதனை செய்தபோது தகுந்த முகாந்திரம் தெரிவிக்காத பணம் ரூ.2000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.அந்தோணி ராஜா என்பவருடன் வந்த திரு.பொன்ராஜ் என்பவரை சோதனை செய்ய தனது பேண்ட்டின் வலது பாக்கெட்டிலிருந்து இரண்டு காக்கி கவர்களில் தலா இரண்டு 500 ரூபாய் நோட்டுகட்டுகள் ஆகமொத்தம் நான்கு 500 ரூபாய் கட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை எண்ணிப்பார்க்க பணம் ரூ.2,00,000/- இருந்தது. அதை குறித்து அவரிடம் விசாரிக்க, தான் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.சோமசுந்தரம் அவர்கள் கருமத்தம்பட்டி புனித மைக்கேல் துறவற சகோதரர்கள் சபையினருடன் ஏற்படுத்திக்கொண்ட நில விற்கிரைய ஒப்பந்தத்தின்படி மேற்படி சபைக்கு சொந்தமான சூலூர் வட்டம், கருமத்தம்பட்டி கிராமம், க.ச.எண்.277/1A மற்றும் 277/1B1 காலைகளில் சுமார் 35-அடி அகலமும், 94.80 மீட்டர் நீளமும் கொண்ட இடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு பொதுபாதைக்காக கருமத்தம்பட்டி பேரூராட்சிக்கு தானமாக கொடுப்பதற்க்காக சூலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் நன்கொடை ஆவணம் பதிவு செய்திட கருமத்தம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் பரிந்துரை கடிதம் பெற கருமத்தம்பட்டி புனித மைக்கேல் துறவற சகோதரர்கள் சபை நிர்வாகத்தினரால் தன்மூலமாக ஏற்கனவே 05.09.2020ஆம் தேதி கொடுத்த விண்ணப்பத்தினை பேரூராட்சி அலுவலகத்தில் தொடர்ந்து கண்காணித்து பரிந்துரை கடிதம் பெற்றிடுமாறு தான் பணிபுரியும் நிறுவன

உரிமையாளர் பணித்திருந்ததாகவும், அதன்பேரில் தான் மேற்படி மனு அளித்த 05.09.2020ஆம் தேதியிலிருந்து கருமத்தம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் அவர்களை சுமார் ஐந்து ஆறு முறை நேரில் சந்தித்து மேற்படி பரிந்துரை கடிதம் அளிக்க கோரியதாகவும், இறுதியாக செயல் அலுவலர் அவர்கள் எங்களது கோரிக்கை சம்பந்தமாக தரகர் தங்கமுத்து என்பவரிடம் கூறியுள்ளதாகவும், அதனால் மேற்படி தங்கமுத்துவை பார்த்து அவர் சொல்வதை செய்யுமாறு கூறியதாகவும் தெரிவித்தார். அதன்படி தானும் திரு.அந்தோணி ராஜாவும் மேற்படி தரகர் தங்கமுத்துவை ஏற்கனவே பார்த்ததாகவும், அப்போது தரகர் தங்கமுத்து மேற்படி 05.09.2020ஆம் தேதியிட்ட மேற்படி விண்ணப்பத்தை கொண்ட கோப்பினை செயல் அலுவலர் தன்னிடம் ஏற்கனவே கொடுத்துவிட்டதாகவும், அவர் கேட்ட பணத்தை கொடுத்தால் மட்டுமே விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு ஏற்றுகொள்வதும், அதன்பேரில் நடவடிக்கை எடுப்பதும் வழக்கம் என்றும், அதனால் எங்களது விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை மேற்கொண்டு பரிந்துரை கடிதம் வழங்க செயல் அலுவலர் தன்னிடம் தெரிவித்த ரூ.5,00,000/-ஐ கொடுக்குமாறும் தெரிவித்ததாகவும் தெரிவித்தார். மேற்படி தரகர் தங்கமுத்து கூறிய விபரத்தை தான் பணிபுரியும் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.சோமசுந்தரம் அவர்களிடம் தெரிவித்ததாகவும், அவர் மீண்டும் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களை சந்தித்து பணம் எதுவும் கொடுக்காமல் பரிந்துரை கடிதத்தை கொடுக்குமாறு பணிந்து கேட்குமாறு அறிவுறுத்தியதின்பேரில் தான் மீண்டும் செயல் அலுவலரை சந்தித்தபோது அவர் மேற்படி பரிந்துரை கடிதம் பெற தரகர் தங்கமுத்துவை சந்தித்து அவர் கூறியபடி செய்தால் மட்டுமே பரிந்துரை கடிதம் வழங்க இயலும் என கறாராக கூறிவிட்டதாகவும் தெரிவித்தார். இவ்வாறு கறாராகவே கூறி பலமுறை தங்களை அலைக்கழிக்க வைத்ததால் தான் அவரது உரிமையாளரிடம் இது குறித்து கூறிவிட்டதாகவும் அவரும் வேறுவழியில்லாமல் செயல் அலுவலர் கேட்ட ரூ.5,00,000/-க்கு பதிலாக கொஞ்சம் தொகையை குறைத்து ரூ.2,00,000/-ஐ கொடுத்து அவரிடம் பணிந்து கேட்டு பரிந்துரை கடிதத்தை பெற்றுவருமாறு கூறியதாக தெரிவித்ததாக்வும் தனது நிறுவன உரிமையாளர் பணம் ரூ.2,00,000/-ஐ தன்னிடம் கொடுத்து, செயல் அலுவலரை சந்தித்து அந்த தொகையை அவரிடம் கொடுத்து நன்கொடை ஆவணம் பதிவு செய்ய பரிந்துரை கடிதம் பெற்றுவருமாறு கூறியதாக தெரிவித்தார். அதன்படி 08.12.2020 தேதி அவரும் அந்தோணிராஜாவும் தரகர் தங்கமுத்து என்பவரிடம் கொஞ்சம் தொகையை குறைக்கும்படி வேண்டி கேட்டதற்கு அவர் தொகையை குறைக்க முடியாது என்றும் நீங்களே செயல் அலுவலரை சந்தித்து தொகையை குறைத்து கேட்கும்படி தெரிவித்ததாகவும், மேலும் அவரே செயல் அலுவலரிடம் சொல்லி கொள்வதாகவும் தெரிவித்தார். அதன் பேரில் 08.12.2020 தேதி மதியம் சுமார் 13.45 மணியளவில் அவரும், திரு.அந்தோணி ராஜா என்பவரும் மேற்படி பேரூராட்சி அலுவலகம் சென்று செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ்

அவர்களை அவரது அறையில் சந்தித்து தங்களின் விண்ணப்பத்திற்குண்டான நன்கொடை ஆவணம் பதிவு செய்ய பரிந்துரை கடிதத்தை கேட்டும், தாங்கள் கேட்டுக்கொண்ட தொகையில் கொஞ்சம் குறைக்கும்படியும் ரூ.2,00,000/- கொண்டு வந்துள்ளதாக அவரிடம் தெரிவித்தபோது, அவர் தரகர் தங்கமுத்துவிற்கு தகவல் சொல்லி வரச்சொல்வதாகவும் தங்களை அலுவலகத்தில் இருக்கும்படி சொன்னதாகவும், அதன்படி தாங்கள் அலுவலகத்தில் இருந்த போது திடீர் தணிக்கை குழுவினராகிய தாங்கள் செயல் அலுவலரின் அறைக்குள் வந்து தன்னை விசாரித்தபோது தான் மேற்படி விபரங்களை தெரிவித்ததாகவும் கூறினார். மேற்படி நன்கொடை ஆவணம் பதிவு செய்ய செயல் அலுவலரிடம் பரிந்துரை கடிதம் பெற செயல் அலுவலருக்கு கொடுப்பதற்காக கொண்டு வந்ததாக தெரியவந்ததால் மேற்படி தொகை ரூ.2,00,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் என்பவரிடம் மேற்படி சபை நிர்வாகம் சார்பில் பொது உபயோகத்திற்கான தான நன்கொடை ஆவணம் பதிவு செய்ய பரிந்துரை கடிதம் வழங்குதல் சம்பந்தமாக கேட்ட போது தான் ஏற்கனவே மேற்படி விண்ணப்பத்துடன் கூடிய கோப்பினை தரகர் தங்கமுத்து என்பவரிடம் கொடுத்துள்ளவும், அதனை எடுத்துக்கொண்டு பேரூராட்சி அலுவலகத்திற்கு வருமாறு தங்கமுத்துவுக்கு தெரிவித்தார். மேற்படி விண்ணப்பம் குறித்து அலுவலக தன்பதிவேட்டில் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். இந்த நடவடிக்கையின்போது செயல் அலுவலரால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு தரகர் தங்கமுத்து மேற்படி விண்ணப்பம் மற்றும் அதனுடன் கூடிய ஆவணங்களுடன் பேரூராட்சி அலுவலகத்தில் செயல் அலுவலரின் அறைக்கு வந்தார். அவரை பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் தங்கமுத்து என்றும் தான் பேரூராட்சி அலுவலகத்திற்கு வரும் பொது மக்களுக்கு பல்வேறு வேலைகளை செய்து வரும் இடைத்தரகராக இருந்து வருவதாகவும் செயல் அலுவலர் மேற்படி ஆவணத்தை எடுத்துவர கூறியதன் பேரில் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அப்போது அவரிடமிருந்த விண்ணப்பத்தை பற்றி விசாரித்தபோது மேற்படி விண்ணப்பம் மற்றும் அதனுடன் கூடிய கோப்பினை செயல் அலுவலர் திரு.பி.செல்வராஜ் அவர்கள் தன்னிடம் ஏற்கனவே கொடுத்ததாகவும், அதில் சில ஆவணங்களை விண்ணப்பதாரரிடம் பெற சொன்னதாகவும், அந்த பரிந்துரை கடிதத்தை ஒப்புகை செய்ய பணம் ரூ.5,00,000/-ஐ கேட்டுப் பெற்றுக்கொண்டு தன்னிடம் தெரிவிக்குமாறு கூறியதாகவும், அதன்பேரில் தான் திரு.அந்தோணிராஜா மற்றும் திரு.பொன்ராஜ் ஆகியோர்களிடம், மேற்படி செயல் அலுவலர் கூறிய விபரங்களை சொல்லியிருந்ததாகவும் பணம் பெற்ற பின்னரே விண்ணப்பத்தை செயல் அலுவலர் ஒப்புகை செய்வது வழக்கம் என்று கூறியதாகவும் தெரிவித்தார். மேலும் 08.12.2020 தேதி திரு.பொன்ராஜ் மற்றும் திரு. அந்தோணிராஜாவும் தன்னிடம் கொஞ்சம் தொகையை குறைக்கும்படி வேண்டி கேட்டதற்கு தான் தொகையை குறைக்க முடியாது என்றும்

அவர்களையே செயல் அலுவலரை சந்தித்து தொகையை குறைத்து கேட்கும்படி தெரிவித்ததாகவும், மேலும் தான் செயல் அலுவலரிடம் சொல்லி கொள்வதாகவும் தெரிவித்ததாக சொன்னார். பின்னர் 08.12.2020 -ம் தேதி மாலை தன்னை செயல் அலுவலர் அவரது அலுவலகத்திற்கு மேற்படி விண்ணப்பம் மற்றும் அதன் தொடர்புடைய ஆவணங்களை எடுத்து வருமாறு கூறியதன் பேரில் தான் பேரூராட்சி அலுவலகத்திற்கு வந்து விண்ணப்பத்துடன் கூடிய ஆவணங்களை ஒப்படைத்ததாக தெரிவித்தார். மேற்படி ஆவணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுசம்பந்தமாக ஒரு நடவடிக்கை 08.12.2020-ம் தேதி 14.00 மணி முதல் 23.45 மணிவரை தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,02,000/- மற்றும் ஆவணங்களை இத்துடன் இணைத்துள்ளேன். தணிக்கையின் போது கண்டுபிடிக்கப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக புலன்விசாரணை செய்து சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இணைப்பு: 1) நடவடிக்கை குறிப்பு, 2) கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,02,000/-, 3) பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், 4) கைப்பற்றப்பட்ட ஆவணங்கள். (Sdxxxxx) ஆய்வுக்குழு அலுவலர், கோயமுத்தூர். Sir, received the complaint on 09.12.2020 at 10.30hrs and registered a case in Coimbatore V & AC Cr.No.11/2020/AC/CB u/s 7(a), 7(A) of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 on 09.12.2020 at 11.30 hrs. (Sdxxxxxx) T.H.Ganesh, Deputy Superintendent of Police, V&AC, Coimbatore. இதன் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார், நடவடிக்கைகள் மற்றும் ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஆகியவைகளை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டன.

(T.H.கணேஷ்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.